*1972 மார்ச் 25]

திருமதி த. ந. அனந்தநாயகி : மாநகராட்சிகளுக்கு சிப்பந்திகளை சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கச் செய்வது என்று யோசித்தோமே, அது எதிர்காலத்திலாவது செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் அதுபோல எண்ணப்பட்டு பிறகு கைவிடப்பட்டது. அவர்களே குழுக்கள் அமைத்துக் கொண்டு, விதிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் அடிப்படையில் தேர்வுகளை நடத்துகிறார்கள்.

புலவர் திரு. சி. பழனிச்சாமி : பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய சிலைகளை நாம் சென்னையில் வைத்திருக்கிறோம். பறவைகள் அந்தச் சிலைகளை அசுத்தப்படுத்துகின்றன. அவற்றை நல்லமுறையில் பராமரிக்க மாநகராட்சி சில பணியாளர்களை நியமிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Salary for Municipal Councillors

* 699 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have turned down the request of the Tiruvottiyur Municipality for payment of salary to Municipal Councillors ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) திருவொற்றியூர் நகராட்சி நகரமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாத ஈட்டுப் படியாக ரூ. 75 தர அனுமதிக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : நகர மன்றத்தின் அங்கத்தினர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய பணிகளும் விரிவு அடைந்திருக்கின்றன. ஆகவே எல்லா நகர மன்ற அங்கத்தினர்களுக்கும் ஓரளவு சம்பளம் கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீண்டகாலத்திற்குப் பிறகு இப்போதுதான் சென்னை, மதுரை நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு முறையே ரூ. 100, ரூ. 75 மாதந்தோறும் படி வழங்கும் ஏற்பாடு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் நகரங்கள் விரிவு அடைந்துவிட்ட காரணத்தினால் அதிக தூரத்தில் இருந்து அடிக்கடி செலவு செய்து கொண்டு வந்துபோகவேண்டியிருக்கிறது என்பதாகும். மற்ற நகராட்சிகளைப் பொறுத்தவரை அங்கத்தினர்கள் அங்கங்கே இருக்கிறவர்கள்—மேலும் பலவற்றின் நிதி நிலையும் சரியாக இல்லை, ஆகவே இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை இருக்குமானால் கொடுக்கவேண்டாம். நிதிவசதி நன்றாக இருக்கும் நகராட்சி மன்றங்களில் கவுன்சிலர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான தக்க ஏற்பாடுகளை அரசு செய்துகொடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது வேண்டுமானால் நிதி நன்றாக இருக்கிறது என்று சொல்லலாம். சில காலங்களில் பற்றாக்குறையாகிவிடக் கூடும். ஆகவேதான் இதற்கென ஒரு கொள்கையென்று வகுக்கப்படுமானால் நல்லது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகராட்சியில் பணிபுரியும் அங்கத்தினர்கள் சம்பளம் வேண்டுமென்று தீர்மானம் போட்டு நிறைவேற்றி, அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற " கன்வேயன்ஸ் அலவன்ஸ் " 100 ரூபாய் போதாது என்று அங்கத்தினர்கள் அமைச்சர் அவர்களிடம் தூது வந்தார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்குப் போதுமா என்று கேட்டால், எவ்வளவு கொடுத்தாலும் போதாதுதான். அங்கு இருக்கக்கூடிய நிதி வசதிகளைக் கண்டறிந்துதான் அவர்களுக்கு கன்வேயன்ஸ் அலவன்ஸ் 100 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

நூலகங்களுக்கு பத்திரிகைகள்

***700 வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மானியம் பெற்று இயங்கி வரும் நூலகங்களில் எத்தகைய பத்திரிகைகளை வரவழைக்க வேண்டுமென்று விதிமுறை வகுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நூலகங்களே விதி முறைகளை வகுத்துக்கொள்ளலாம். பொதுவாக, எப்பிரிவினரையும் இழிவு படுத்தும் ஏடுகளை வாங்கக்கூடாது என்று மட்டுமே அரசு கூறியுள்ளது.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பத்திரிகைகளை நூலகங்களில் வரவழைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ? எந்த அரசியல் கட்சிப் பத்திரிகையையாவது நிராகரித் திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி எந்தப் பத்திரிகையை வாங்கலாம், எந்தப் பத்திரிகையை வாங்கக் கூடாது என்று அரசு சுற்றறிக்கை எதுவும் விடவில்லை. இனம், சமயம் ஆகிய வேறுபாடுகளைத் தூண்டக்கூடிய நூல்களையோ பத்திரிகைகளையோ,